# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC No.373/2025 | Date: 12.03.2026 |
| Deposition of Witness for | : | **பு.சா.1** | |
| Name | : | **முருகேசன்** | |

(எதிரி ஆஜர்).

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி** :-

1) எனது வங்கி கணக்கு சேமிப்பு கணக்கு என்றால் சரிதான். எனது மனைவி டெய்லரிங் தொழிலும், துணி கடை தொழிலும் செய்து வருகிறார். வேறு எந்த தொழிலும் எனது மனைவி செய்யவில்லை என்றால் சரிதான். எனது மனைவி வட்டி தொழிலும், சீட்டு நடத்தும் தொழிலும் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது மனைவி துணி கடை வைத்துள்ளார் என்று நான் இந்த வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) எதிரிக்கு எழுத படிக்க தெரியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு எழுத படிக்க தெரியாது என்று எனக்கு தெரியும் என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கொங்கணாபுரம் காவல் நிலையத்தில் எதிரியின் மனைவி, என்மீதும், எனது மனைவி மற்றும் சுப்ரமணி ஆகியோர் மீது புகார் அளித்து அதன் விசாரணைக்கு நான், எனது மனைவி மற்றும் சுப்ரமணி ஆகியோர் சென்றிருந்தோம் என்றால் நான் மட்டும் சென்றிருந்தேன், மற்றவர்கள் வரவில்லை. நானும், சுப்ரமணியும் விசாரணைக்கு வந்திருந்தோம் என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, சுப்ரமணி என்னுடன் வரவில்லை, எதற்காக வந்தார் என்று எனக்கு தெரியாது.

3) சுப்ரமணி என்பவர் எனது பக்கத்து ஊர்க்காரர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுப்ரமணி எனது நண்பர் என்றும், எதிரி, சுப்ரமணியிடம் கொடுத்த வழக்கு காசோலையை வைத்து இந்த வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்திற்கு விசாரணையின் போது சுப்ரமணி என்னுடன் தான் வந்தார் என்றும், அவருக்கு ஆதரவாக தான் காவல்நிலையத்தில் வாக்குமூலம் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு பணத்தை எங்கு வைத்து கொடுத்தேன் என்று எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான், நான் வீட்டில் வைத்து கொடுத்தேன்.

4) நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் இருந்து இவ்வழக்கு காசோலை என்னிடம் தான் இருந்தது என்றால் சரிதான். நான் வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரியிடம் பணம் கேட்ட விவரத்தை நான் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், பலமுறை கேட்டேன். காசோலையை கடந்த 07-05-2025ம் தேதியில் நான் தான் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு, எதிரிக்கு ரூ.20,00,000/-ம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமானம் இல்லை என்றும், அப்படி வருமானம் இருந்திருந்தால் அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

5) நான் எதிரிக்கு கடன் கொடுத்த சமயத்தில் எனது மாத வருமானம் தோராயமாக ரூ.1,00,000/-ம் வருமானம் வரும் என்றால் சரிதான். எனது மாதம் வருமானத்திற்கு ஆதரவாக ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு போதிய வருமானம் இருந்திருந்தால்,

நான் வருமான வரி செலுத்தியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. காசோலையை எதிரி பூர்த்தி செய்து கொண்டு வந்தார் என்று சொல்வது பொய் என்றும், எதிரிக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரியல்ல, அவர் தான் கொண்டு வந்து கொடுத்தார். எதிரியின் குடும்பத்தை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரியின் மீதும், எதிரியின் மனைவியின் மீதும் எனது நண்பர் சுப்ரமணியத்தை வைத்து ரூ.10,00,000/-ற்கு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்வதற்காக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய் வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Murugesan

Judicial Magistrate No.1,
Sankari.